**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 13 ஆம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.66/2024**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : Nil<br>Released on : A1,A2-03.04.2018(AB Surrender) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 02.03.2023 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 20.08.2024 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | Nil | |
| | | Chief | Cross |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | P.W.1 – 16.10.2025 | P.W.1– 16.10.2025 |
| | | P.W.2 – 03.11.2025 | P.W.2 – 03.11.2025 |
| | | P.W.3 – 03.11.2025 | P.W.3 – 03.11.2025 |
| | | P.W.4 – 19.05.2026 | P.W.4 – 19.05.2026 |
| | | P.W.5 – 07.07.2026 | P.W.5 – 07.07.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the | 09.07.2026 | |



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:03 +0530

| | | |
|---|---|---|
| | Court | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>**காவல் ஆய்வாளர்,**<br>வடுவூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 44/2018,<br>ச/பி.,323,506(1) இதச | | ............குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| 1)துரைராஜ், வயது 70/2022,<br>த/பெ.தங்கைய்யா,<br>மெயின் ரோடு,<br>வடுவூர் புதுக்கோட்டை. | | ............ எதிரிகள் |
| 2)செல்வகணபதி, வயது 43/2022,<br>த/பெ. துரைராஜ்,<br>மெயின் ரோடு,<br>வடுவூர் புதுக்கோட்டை. | | |

இவ்வழக்கானது கடந்த 06.02.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 09.07.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திருமதி.D.துர்காதேவி B.A.,B.L., நிலை.2 அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.தமிழ்வாணன், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள்


JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:12 +0530

கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (13.07.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..............

**//தீர்ப்புரை//**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

வடுவூர் காவல் சரகத்திற்குட்பட்ட வடுவூர் புதுக்கோட்டை மெயின் ரோட்டில் வழக்கின் வாதியான காந்தி 75/2018 த/பெ.தங்கையா என்பவருக்கு அவரது தம்பி துரைராஜ் என்பவருக்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை இருந்து வந்த நிலையில் 10.03.2018 ஆம் தேதி 14.00 மணிக்கு வழக்கின் வாதி அவரது வயலில் உளுந்து பிடுங்கி கொண்டு இருந்தபோது அங்கு வந்த வழக்கின் எதிரி-1 துரைராஜ் மற்றும் எதிரி-2 ஆன செல்வகணபதி என்பவரும் சேர்ந்து வாதியை எப்போதும் எங்ககிட்ட பிரச்சனை செய்துகிட்டு இருக்க என்று சொல்லிக்கொண்டே இருவரும் உருட்டு கட்டையால் வாதியை அடித்து வாதிக்கு சொற்பகாயம் (Simple injury) உண்டு பண்ணியும் இனிமேல் வயல்ல இறங்கினா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என இருவரும் மிரட்டி குற்றச்செயல் புரிந்துள்ளார்கள்.எனவே எதிரிகள் இருவரின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 323,506(1) இதசவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என வடுவூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டன. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு பிரிவு 230 BNSS கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 323, 506(1) ன் கீழ் பிரிவு 274 BNSS ன் படி குற்றம் குறித்து வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:18 +0530

சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அ.சா.1 காந்தி** தனது சாட்சியத்தில் தான் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து 2001ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று விட்டேன் என்றும், ஆஜர் எதிரி மற்றும் 1வது எதிரியை தனக்கு தெரியும் என்றும், தனது தம்பி மற்றும் தம்பி மகன் ஆவார்கள் என்றும், கடந்த சில வருடங்களாக தனக்கும் தனது தம்பி துரைராஜீக்கும் நிலப்பிரச்சனை இருந்து வந்தது என்றும், 10.03.2018 ஆம் தேதியன்று மதியம் 2.00 மணியளவில் தனக்கு சொந்தமான வயலில் உளுந்து பிடிங்கி கொண்டிருந்தேன் என்றும் அப்போது 1வது எதிரியும் அவரது மகனான ஆஜர் எதிரியும் அங்கு வந்து தன்னை உருட்டு கட்டையால் தன்னுடைய இடது காலில் அடித்தனர் என்றும் தான் தன்னை விட்டு விடுமாறு கையை எடுத்து கும்பிட்டு கெஞ்சியும் தன்னை தாக்கினார்கள் என்றும் இனிமேல் நீ வயலில் இறங்கினால் உன்னை கொன்று விடுவேன் என்றும் தன்னிடம் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் எதிரிகள் தாக்கியதில் தனது காலில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அப்போது அங்கு வந்த தம்பி ராமதாஸ் தன்னை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும் நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும் அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.2 அம்பலவாணன்** தனது சாட்சியத்தில் தான் அரசுப்போக்குவரத்து கழகத்தில் டிரைவர் பணி செய்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன் என்றும் அ.சா 1 தனது மாமா ஆவார் என்றும், ஆஜர் எதிரி மற்றும் 1வது எதிரியை தெரியும் என்றும் கடந்த பல ஆண்டுகளாக இவ்வழக்கின் எதிரிகளுக்கும் அசா1க்கும் இடையே நிலத்தராறு இருந்து வந்தது என்றும், கடந்த 2018 ஆம் வருடம் அ.சா.1-க்கும் எதிரிகளுக்கும் இடையே நிலத்தில் சாகுபடி செய்வது தொடர்பாக பிரச்சனை நடந்தது அதில் அ.சா.1 யிடம் எதிரிகள் இருவரும் தகராறு செய்து அவரது வயலில் வைத்து அ.சா.1-ன் கால் மற்றும் இடுப்பு பகுதியில் அடித்து விட்டனர் அதிலிருந்து அ.சா.1 ஆல்



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:24 +0530

நடக்க முடியாமல் சிரமப்பட்டார் என்றும், அ.சா.1-யை அவருடைய நிலத்தில் சாகுபடி செய்யக்கூடாது என்றும், வரக்கூடாது என்று மிரட்டினர் என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்த்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துளார்.

**அ.சா.3 லோகநாதன்** தனது சாட்சியத்தில் தான் விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், அசா 1 மற்றும் வழக்கின் எதிரிகள் தனது ஊர்க்காரர்கள் தான் என்றும், கடந்த சிலவருடங்களாக அசா1 க்கும் எதிரிகளுக்கும் இடையே நிலத்தராறு இருந்து வந்தது என்றும், கடந்த 10.03.2018 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் அசா1-க்கு சொந்தமான வயலில் உளுந்து அறுத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியும் அவருடைய அப்பாவும் அசா1-டம் வந்து தகராறு செய்தனர் என்றும் தகராறு நடந்த இடம் தான் தனது வயலுக்கு சென்று விட்டு வீட்டுக்கு வரும் பாதையாகும் என்றும், தான் வந்து கொண்டிருந்தபோது எதிரிகள் அசா1 டம் வயலில் இருந்து கரையேறக்கூறி தகராறு செய்ததில் அருகில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் ஓடி வந்தனர் என்றும் அசா1-ஐ எதிரிகள் அடித்து கீழே தள்ளிவிட்டனர் என்றும் அசா 1 ன் வலது காலில் காயம் ஏற்பட்டது என்றும் தான் பிறகு அந்த இடத்திலிருந்து சென்று விட்டேன் என்றும் போலீசார் சம்பவம் தொடர்பாக விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.4 விஷ்ணு- உதவி மருத்துவர் (சாட்சி தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக அறுவை சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருவதால் காணொளி மூலம் சாட்சியம் அளிக்க வேண்டுகோள் வைக்கப்பட்டு வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டு தற்போது தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் இருந்து சி.மணிகண்டன் Assistant Programmer PDC. Thanjavur/Remote Co-ordinator அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டு அவரது முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது)** தனது சாட்சியத்தில் தான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 10.03.2018 ஆம் தேதியன்று தான் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மன்னார்குடியில் முழு நேரப்பணியில்



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:31 +0530

இருந்தபோது மாலை 6.00 மணியளவில் சென்னை எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்த 75 வயது மதிக்கத்தக்க ஆண் திரு. காந்தி அவர்கள் அவசர சிகிச்சை பிரிவிற்கு வந்தார் என்றும், அவரை விசாரித்தபோது அன்றைய தினம் மதியம் 2.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் வடுவூர் புதுக்கோட்டை சாலையில் வைத்து தன்னை கம்பால் தாக்கியதாக அவரே கூறினார் என்றும் அவர் சுயநினைவுடன் காணப்பட்டார் என்றும் அவருக்கு இடது பக்க காலில் 3 x 1 cm அளவில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது என்றும் அவர் உடனடியாக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணக்காயம் என்று சான்று அளித்தேன் என்றும் மேற்படி விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.5 ஜெயந்தி - காவல் ஆய்வாளர்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 25.03.2018 ஆம் தேதி வடுவூர் காவல்நிலைய ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சென்னை எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்த தங்கையா மகன் காந்தி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய மனு எண்.62/2018 பதிவு செய்யப்பட்டதை மனு விசாரணைக்குப்பின் நிலையக்குற்ற எண்.44/2018 ச/பி.323,506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றம், அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் அசாஆ. 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தினயே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு


EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:39 +0530

செய்தேன் என்றும் சாட்சிகளை விசாரித்தவகையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் நிலையம் ஆஜரான எதிரிகளை குற்றக்காரணம் கூறி கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்தேன் என்றும் இச்சம்பவத்தில் காயமடைந்த வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் விஷ்ணு என்பவரை விசாரித்து விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன் என்றும் இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது 323, 506(1)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 03.04.2018 ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரிகளிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**8.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 323,506(1) ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா 1 முதல் 5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 3,5,6 வரையான சாட்சிகள் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் விசாரணை



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:44 +0530

சாட்சியான காவல் ஆய்வாளர் திருமதி ஜெயந்தி அவர்கள் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டும். அசா.ஆ.3 முதல் அசா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் அ.சா. 1 புகார்தாரர் ஆகவும், அ.சா.2 சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சியாகவும்,அ.சா.3 கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.4 மருத்துவ சாட்சியாகவும், அ.சா.5 புலன் விசாரணை அதிகாரியாகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

**10.<u>முதலாவது குற்றச்சாட்டிற்கு தீர்வு(இதச பிரிவு 323 கீழான குற்றசாட்டு)</u>**

வடுவூர் காவல் சரகத்திற்குட்பட்ட வடுவூர் புதுக்கோட்டை மெயின் ரோட்டில் வழக்கின் வாதியான காந்தி 75/2018 த/பெ.தங்கையா என்பவருக்கு அவரது தம்பி துரைராஜ் என்பவருக்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை இருந்து வந்த நிலையில் 10.03.2018 ஆம் தேதி 14.00 மணிக்கு வழக்கின் வாதி அவரது வயலில் உளுந்து பிடுங்கி கொண்டு இருந்தபோது அங்கு வந்த வழக்கின் எதிரி-**1** துரைராஜ் மற்றும் எதிரி-**2** ஆன செல்வகணபதி என்பவரும் சேர்ந்து வாதியை எப்போதும் எங்ககிட்ட பிரச்சனை செய்துகிட்டு இருக்க என்று சொல்லிக்கொண்டே இருவரும் உருட்டு கட்டையால் வாதியை அடித்து வாதிக்கு சொற்பகாயம் (Simple injury) உண்டு பண்ணியும் இனிமேல் வயல்ல இறங்கினா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என இருவரும் மிரட்டியதாக இதச பிரிவுகள் **323,506(1)**-ன் கீழான குற்றசாட்டை பரிசீலனை செய்கையில்,

அரசு தரப்பு வழக்கின்படி குற்ற நிகழ்வு நாள்- 10.03.2018-ந் தேதி 14.00 மணி. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் -25.03.2018-ந் தேதி 10.00 மணி. குற்ற நிகழ்விடம் (எ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், திசையும் - வடுவூர் புதுக்கோட்டை வாதியின் வயல்-. வடுவூர் காவல் நிலையத்திலிருந்து 3.00 கி.மீ வடக்கிழக்கு என்று ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. மேலும், முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைக்கப் பெற்ற நாள்- 27.03.2018-ந்தேதி காலை 10.30 மணி. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்த நாள்- 25.03.2018-ந் தேதி காலை 11.00 மணி.

EXP2/PW1 dated 18.06.2026

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:52 +0530

11. **அ.சா.1 காந்தி** தனது சாட்சியத்தில் "கடந்த சில வருடங்களாக தனக்கும் தனது தம்பி துரைராஜிக்கும் நிலப்பிரச்சனை இருந்து வந்தது என்றும், 10.03.2018 ஆம் தேதியன்று மதியம் 2.00 மணியளவில் தனக்கு சொந்தமான வயலில் உளுந்து பிடிங்கி கொண்டிருந்தேன் என்றும் அப்போது 1வது எதிரியும் அவரது மகனான ஆஜர் எதிரியும் அங்கு வந்து தன்னை உருட்டு கட்டையால் தன்னுடைய இடது காலில் அடித்தனர் என்றும் தான் தன்னை விட்டு விடுமாறு கையை எடுத்து கும்பிட்டு கெஞ்சியும் தன்னை தாக்கினார்கள் என்றும் இனிமேல் நீ வயலில் இறங்கினால் உன்னை கொன்று விடுவேன் என்றும் தன்னிடம் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் எதிரிகள் தாக்கியதில் தனது காலில் இரத்தக்காயம் ஏற்பட்டது" என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "சம்பவ சமயத்தில் எத்தனை ஏக்கரில் உளுந்து தெளித்து இருந்தேன் என்றால் 4 ஏக்கரில் பயில் செய்திருந்தேன்.சம்பவ நேரத்தில் வயலில் எத்தனை ஆட்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் நானும், தன்னுடன் 3 நபர்களும் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.யார் என்னை கட்டையால் அடித்தார்கள் என்றால் துரைராஜ் தான் கட்டையால் அடித்தார்.கட்டையின் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால் 3 அடி இருக்கும் துரைராஜ் எங்கெல்லாம் அடித்தார் என்றால் கால், கை, உடல் முழுவதும் அடித்தார். உண்மையில் அன்றையதினம் எந்தவொரு சம்பவம் நடைபெறவில்லை என்றும், தனது தம்பி துரைராஜ் மற்றும் அவரது மகனை பழிவாங்க வேண்டும் நோக்கத்தில் எந்தவொரு வெளிப்புற காயங்கள் இல்லாத நிலையில் ஒரு பொய் வழக்கினை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் அன்றையதினம் தனது புகாரில் கொடுத்தது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எங்கள் சகோதாரர்களுக்குள் இருக்கும் சொத்து பிரச்சனைகளில் துரைராஜ்க்கு கொடுக்காமல் பழிவாங்க வேண்டும் என்பதற்காக இல்லாத சம்பவத்தை உருவாக்கியுள்ளோம் என்றும், பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல"என்று சாட்சியமளித்துள்ளார்.



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:43:58 +0530

12. வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டதாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 அம்பலவாணன் தனது முதல் விசாரணையில் "கடந்த 2018 ஆம் வருடம் அ.சா.1-க்கும் எதிரிகளுக்கும் இடையே நிலத்தில் சாகுபடி செய்வது தொடர்பாக பிரச்சனை நடந்தது அதில் அ.சா.1 யிடம் எதிரிகள் இருவரும் தகராறு செய்து அவரது வயலில் வைத்து அ.சா.1-ன் கால் மற்றும் இடுப்பு பகுதியில் அடித்து விட்டனர் அதிலிருந்து அ.சா.1 ஆல் நடக்க முடியாமல் சிரமப்பட்டார் என்றும், அ.சா.1-யை அவருடைய நிலத்தில் சாகுபடி செய்யக்கூடாது என்றும், வரக்கூடாது என்று மிரட்டினர் என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்த்தேன்" என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "எதிரிகள் எனது மாமனாரை கட்டையால் அடித்ததால் காலில் ஏற்பட்ட இரத்தக்காயம் இடுப்பில் ஏற்பட்ட காயம் நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில் பணியில் இருந்தேன். சம்பவத்தை பார்த்து நான் ஓட்டி சென்ற பேருந்தை சம்பவ இடத்திலேயே நிறுத்திவிட்டு எனது மாமனாரை நான் ஓட்டி வந்த பேருத்தில் ஏற்றி அவரை மருத்துவமனையில் அனுமதித்து திரும்ப பயணிகளை பேருந்து நிலையத்தில் அனுப்பிவிட்டு நான் மறுபடியும் மருத்துவமனைக்கு சென்று எனது மாமனாருக்கு உதவியாக இருந்தேன் என்றால் சரிதான்" என்று சாட்சியமளித்துள்ளார்.

13. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசுதரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.3 லோகநாதன் தன்னுடைய முதல் விசாரணையில் "கடந்த 10.03.2018 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் அசா1-க்கு சொந்தமான வயலில் உளுந்து அறுத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியும் அவருடைய அப்பாவும் அசா1-டம் வந்து தகராறு செய்தனர் என்றும் தகராறு நடந்த இடம் தான் தனது வயலுக்கு சென்று விட்டு வீட்டுக்கு வரும் பாதையாகும் என்றும், தான் வந்து கொண்டிருந்தபோது எதிரிகள் அ.சா.1 டம் வயலில் இருந்து கரையேறக்கூறி தகராறு செய்ததில் அருகில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் ஓடி வந்தனர் என்றும் அ.சா.1-ஐ எதிரிகள் அடித்து கீழே தள்ளிவிட்டனர் என்றும் **அசா 1 ன் வலது காலில் காயம்** ஏற்பட்டது என்றும் தான் பிறகு அந்த இடத்திலிருந்து சென்று விட்டேன்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.



JAYARAMAN TAMIZHMURUGAN
EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:03 +0530

14. அ.சா.3 லோகநாதன் தனது குறுக்கு விசாரணையில் "எதிரிகளை அடித்ததில் கால் வீங்கி இருந்தது. இச்சம்பவம் எனக்கு மட்டும் தெரியும் வேலை செய்த ஆட்கள் ஓடி விட்டார்கள். நான் மட்டும் நின்று கொண்டு இருந்தேன் பாதிக்கப்பட்ட புகார்தாரரை மருத்துவ உதவி செய்வதற்கோ அவரை காப்பற்றுவதற்கோ எந்த உதவியும் செய்யவில்லை" என்று சாட்சியமளித்துள்ளார்.

15. அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் "10.08.2018 மதியம் 2.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் வடுவூர் புதுக்கோட்டை சாலையில் வைத்து தன்னை கம்பால் தாக்கியதாக அவரே கூறினார் என்றும் அவர் சுயநினைவுடன் காணப்பட்டார் என்றும் அவருக்கு இடது பக்க காலில் 3 x 1 cm அளவில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை அனுசரித்து அ.சா.4 மருத்துவர் விஷ்ணு சாட்சியமளித்துள்ளார்.

16. இந்த வழக்கு சம்பவம் 10.03.2018-ம் தேதி நடந்து இருந்தாலும் 25.03.2018-ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனு விசாரணைக்கு பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டதாலும் மனு விசாரணை பற்றிய விவரங்கள் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை.அசா.1-க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே, சிவில் சம்மந்தமான குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், எதிரிகள் கொடுத்த புகாரின் பெயரில் வடுவூர் காவல் நிலைய குற்ற எண்.52/2018 சட்டபிரிவுகள் 448,427,506(1)இதச- வின் கீழ் புகார்தாரர் காந்தி,ராமதாஸ்,குமார் மற்றும் நான்கு நபர்கள் மீது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்பது புகார்தாரர் தரப்பால் மறுக்கப்படவில்லை. மேலும், புகார்தாரருடன் அன்று உளுந்து செடி எடுத்த மற்ற பணியாளர்களை சாட்சியாக விசாரணை செய்யப்படாததும் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உள்ளாக்கிறது.

17. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சிங்களிலிருந்தும் ஆவணங்களிலிருந்தும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் இயற்கையாகவும் நம்பும்படியாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே அரசு தரப்பு வழக்கில் கண்டவாறு வழக்கு சம்பவம் நடைபெற்றதா?என்ற ஐயம் எழுகிறது.

18. அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அசா.1-க்கு ஏற்பட்ட காயம்



EXP2/PW1 dated 18.06.2026
JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:09 +0530

எதிரிகளால் தான் ஏற்படுத்தப்பட்டது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

19. மேலும், அ.சா.1 சாட்சியத்தில் தனக்கு எதிரி மிரட்டியதாகவோ அதனால் தனக்கு உயிர் பயமோ பீதியோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

20.எனவே மேலே விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இவ்வழக்கின் எதிரிகள் மீதான இ.த.ச பிரிவுகள் 323, 506(1) ன் கீழும், குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

21. இறுதியாக , இவ்வழக்கின் எதிரிகள் மீதான இ.த.ச பிரிவுகள் 323, 506(1) ன் கீழும், குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

22. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, அதுகுறிதது உத்தரவு எதுவும் இல்லை.

23. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , பிழை நீக்கம் செய்யப்பட்டு , இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 13 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:16 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

மன்னார்குடி.

1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :

| சாட்சியின் வரிசை | சாட்சியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|



JAYARAMAN TAMIZHMURUGAN

EXP2/PW1 dated 18.06.2026
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:24 +0530

| | | |
|---|---|---|
| **எண்.** | | |
| அசா.1 | காந்தி | புகார்தாரர் சாட்சி |
| அசா.2 | அம்பலவாணன் | கண்ணுற்ற சாட்சி |
| அசா.3 | லோகநாதன் | சம்பவம் பற்றி கேள்விபட்ட சாட்சி |
| அசா.4 | விஷ்ணு-உதவி மருத்துவர் | மருத்துவ சாட்சி |
| அசா.5 | ஜெயந்தி-காவல் ஆய்வாளர் | விசாரணை அதிகாரி |

**2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| **சான்றாவணங்களின் வரிசை எண்.** | **தேதி** | **சான்றாவணம் குறிப்பு** | **சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 25.03.2018 | புகார் வாக்குமூலம் | அ.சா.1- மூலம் |
| அ.சா.ஆ. 2 | 10.03.2018 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.4- மூலம் |
| அ.சா.ஆ. 3 | 25.03.2018 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5-மூலம் |
| அ.சா.ஆ. 4 | 25.03.2018 | பார்வை மகசர் | அ.சா.5- மூலம் |
| அ.சா.ஆ. 5 | 25.03.2018 | மாதிரி வரைப்படம் | அ.சா.5- மூலம் |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை

4. எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் : இல்லை

EXP2/PW1 dated 18.06.2026

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.



EXP2/PW1 dated 18.06.2026

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:36 +0530

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.

EXP2/PW1 dated 18.06.2026

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.13 19:44:44 +0530